விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=



சங்கு 24
ஒலி 169 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (06.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


## பொலிஸ் நிலையத்தில் இன்று முன்னிலையாகுமாறு
### கஜேந்திரகுமார் எம்.பிக்கு அழைப்பு

(யாழப்பாணம்)

வடமராட்சி மருதங்கேணியில் கடந்த 2ஆம் திகதி புலனாய்வாளர் ஒருவர் கஜேந்திரகும்ார் எம்.பி மீது தாக்குதல் நடத்தியதோடு பொலிஸார் ஒருவர் துப்பாக்கியை காட்டி மிரட்டியும் உள்ளார்.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் இன்று முன்னிலையாகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திர

11

### பொலிஸாரின் கடமைக்கு இடையூறு
## முன்னணியின் மகளிர் அணித் தலைவி கைதாகி விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் எனத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணி தலைவி சற்குணதேவி ஜெகதீஸ்வரன் கைதாகிய நிலையில் அவரை எதிர் வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நேற்று அதி காலை மருதங்கேணி பொலி

11

### எரிபொருளுக்கான
## கோட்டா முறையை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

சீனாவின் Sinopec நிறுவனம் இலங்கையில் எரி பொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்த வுடன் தற்போதைய எரிபொருள் கோட்டா முறை மையை நீக்குவதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்தி எரிசக்தி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறையால் எந்தவகையிலும் எரிபொரு ளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என இராஜாங்க அமைச் சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார். (ம)

## வட மாகாணத்துக்கு ஒத்துழைப்போம்
### வடக்கு ஆளுநரிடம் யாழ்.இந்திய துணைத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

*வடக்குக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பு களும் இந்தியாவால் வழங் கப்படும் என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வட மாகாண ஆளுநரிடம் உறுதி யளித்துள்ளார்.*

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட் ராஜ் ஜெயபாஸ்கரன் வடமாகாணத் தின் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்து

11



## மருந்துகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளன
### சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் விலை குறைக் கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குறித்த மருந்துகளின் விலை 16 சதவீதத்தினால் குறைக்கப்

11

### வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன்
## யாழ்.பல்கலைக்கழகம் புரிந்துணர்வு உடன்படிக்கை



11

## நாட்டில் ஊடக சுதந்திரத்தினை இல்லாதொழிக்க முயற்சி
### அரசு மீது ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உத்தேச ஒலிபரப்பு அதி கார சபை சட்டத்தை கொண்டு வருவதற்கான யோசனை அரசியல் தீர்மானத்தின் அடிப் படையில் எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

இதன்படி, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து

11



## நுணாவிலில் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் வீதி நுணாவில் கிழக்கு பகுதி யில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று திங்கட் கிழமை காலை முதியவர் ஒருவர் தூக்கிட்ட நிலையில் சடல

11

## உத்தேச ஒலிபரப்பு அதிகார சபை சட்டமூலத்தை எதிர்ப்போம்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உத்தேச ஒலிபரப்பு அதி காரசபை சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஜனநாயகத்தின் நான் காவது தூணாக கருதப்படும் ஊடகங்களின் சுதந்திரத்தை உத்தேச சட்டமூலம் அழித்து விடும் என இந்த சந்திப்பின் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேம

11

## ஏ9 வீதியில் விபத்து
### 7 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

ஏ 9 வீதியில் மன்னகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 7 பேர்படுகாயமடைந் துள்ளனர்.

குறித்த விபத்து

11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தூதுவர் மலையக மக்களை சந்திப்பு



மலையகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அங்கு மக்களை சந்தித்து அவர்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடிகள் குறித்து கருத்துக்களை கேட்டறிந்துள்ளார்.

இன்று(நேற்று) நான் மலையகத்தில் அந்த மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார அரசியல் இடையூறுகள், சிறந்த வீடு கல்வி தங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து கேட்டறிவதற்காக அந்த பகுதி குடும்பங்களை சந்தித்தேன் ( இவர்களில் பலருக்கு 200 வருடகாலவரலாற்றை அந்தபகுதியுடன் தொடர்புள்ளது) என ஜுலி சங் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மகளிர் அமைப்புகளை சேர்ந்த சிறியளவு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்தேன்.அவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்நாட்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிகள் குறித்து தெரிவித்தார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம)

# கோடிக்கணக்கான தங்கத்துடன் வெளிநாட்டு பிரஜையொருவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

எட்டு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான தங்கத்தினை நாட்டுக்கு கொண்டு வர முயற்சித்த வெளிநாட்டு பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த குறித்த சந்தேகநபர் 4.611 கிலோ கிராம் தங்கத்தினை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவர முயற்சித்துள்ளார்.


இலங்கை சுங்கத்தின் இரத்தின, ஆபரண மதிப்பீட்டு பிரிவு மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதான குறித்த பிரான்ஸ் பிரஜை இதற்கு முன்னர் பல முறை இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், இந்த முறை 24 மணித்தியாலங்கள் மாத்திரம் நாட்டில் தங்கியிருக்க வந்துள்ளதை அவதானத்தில் கொண்டு அவரது பயணப்பையை சோதனையிட்ட போதே இந்த தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்கொண்ட விசாரணைகளுக்கு பின்னர் குறித்த தங்கம் அரசுடமையாக்கப்பட்டதுடன் சந்தேகநபருக்கு 7 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த அபராத தொகையை அவர் செலுத்த முடியாமையை தொடர்ந்து நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திக்கடி சில்வா முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய பின்னர் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

# இளவாலை மாரீசன் கூடலில் தேவாலயம் மீது தாக்குதல்



இளவாலை மாரீசன் கூடலில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் தேவாலயத்தில் சொரூபம் வைக்கப்பட்டிருந்த கூட்டின் கண்ணாடி உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆலயத்தின் சுவர் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. (ம)

# மேல் நீதிமன்ற நீதிபதிகளாக

## நால்வர் பதவி உயர்வு

மாவட்ட நீதிபதிகளான ரி.ஜே. பிரபாகரன், பி.கே. பரணகமகே, பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி கே. ஜயதிலக மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி கே.டி. வை.எம். நயனி நிர்மலா கஸ்தூரிரத்ன ஆகியோருக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வழங்கினார். (ம)

# ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலத்துக்கு

## சுதந்திரக் கட்சி எதிர்ப்பு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை தாம் எதிர்ப்பதாக அறிவித்தார்.


இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் ஆகிய இரண்டையும் தற்பொழுது கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

ஊடகவியலாளர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து கைது செய்யும் வகையிலேயே இந்த சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. எனவே இதற்கு நாங்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கிறோம்.

ஊடகங்களை ஒடுக்குவதே அரசாங்கத்தின் பிரதான செயற்பாடாக மாறியுள்ளது என்றார். (ம)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01.02.1951

மறைவு 05.06.2023

எமது நண்பன் ஜெயந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

## கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

(15859)

யாழ்.இந்துக்கல்லூரி

2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு





கடந்த 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது தாயார்

அமரர்

## திருமதி அண்ணாமலை கமலாதேவி (தேவியம்மா)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 06.06.2023 இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் சபிண்டிகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை. அன்போடு அழைக்கின்றோம்.

தூப்புலம், உடுப்பிட்டி. 077 152 0893

(15851)

இங்ஙனம் குடும்பத்தினர் (சகோதரர்கள்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகளவில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படலாம்

## நிதி இராஜாங்க அமைச்சர் அபாய அறிவிப்பு

(கொழும்பு)

**உலகளாவிய ரீதியில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடும் என நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

தந்திரிமலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது. அரச செலவினங்கள் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டில் தற்போது பொருளாதாரம் மீண்டெழுந்து வருகின்றது.



இந்தநிலையில் எதிர்கால ங்களில், உலகில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், 2024 ஆம் ஆண்டுக்கு செல்லும் போது, இதனை விடவும் அதிகளவில், வெற்றியை நோக்கி பயணிக்க முடியும்.

அதற்காக நாம் வரங்களையும் கடப்பாடுளையும் கொண்டிருக்க வேண்டும் என நிதி இராஜங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# மக்கள் ஆணை மீண்டும் எமக்கே கிடைக்கும்

## மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50 வீத பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கச் சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் வினவிய போது,

"ஜனாதிபதியின் கருத்து அவரின் தனிப்பட்ட கருத்து. அவரின் கருத்துக்கு என்னால் பதில் வழங்க முடியாது. ஆனால், எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது. மக்கள் ஆணை மீண்டும் எமது கட்சிக்கே கிடைக்கும்" என அவர் தெரிவித்தார். (நி)

## மசகு எண்ணெய் உற்பத்தியை

# 1 மில்லியன் பீப்பாய்களால் குறைக்கிறது சவூதி அரேபியா

(டோஹா)

தினசரி மசகு எண்ணெய் உற்பத்தியை மேலும் நாளாந்தம் ஒரு மில்லியன் பீப்பாய்களால் குறைப்பதாக சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

சவூதி அரேபியா மற்றும் அதன் 10 பங்காளி ஒபெக் உறுப்பு நாடுகளுடனான கூட்டத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த குறைப்பு எதிர்வரும் ஜூலை மாத இறுதி வரை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தேவையேற்படின், நீடிக்கப்படலாம் என சவுதி அரேபிய எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல்அஜிஸ் பின் சல்மான் செய்தியாளர் தெரிவித்தார்.

வியன்னாவில் உள்ள ஒபெக் தலைமையகத்தில், இடம்பெற்ற பல மணிநேர கலந்துரையாடலின் பின்னர் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# புது வீட்டிற்கு குடிபெயர்ந்த கோட்டாபய

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது ஸ்டான்மோர் கிரசென்டில் உள்ள உத்தியோகபூர்வ அரச பங்களாவிற்கு குடிபெயர்ந்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

குறித்த பங்களா முன்னர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்ததோடு, பாதுகாப்புப் படை பிரதானி மற்றும் விமானப் படைத் தளபதி ஆகியோரின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரிப்பு


(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரித்துள்ளது.

இதற்கு முந்தைய காலங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த மூன்று வாரங்களாக மீண்டும் அதிவேக வளர்ச்சியை பதிவு செய்து வந்தது.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர், யூரோ, பிரித்தானிய பவுண்ட் உள்ளிட்ட பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடைந்தது. அதன் பின்னர் நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 298.85 ரூபாவாகவும், கொள்வனவு விலை 285.60 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தொடரை சமன் செய்தது இலங்கை அணி



அம்பாந்தோட்டையில் நடைபெற்ற போட்டியில் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி இலங்கை அணி தொடரை 1-1 என சமன் செய்துள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி, 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 323 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி சார்பாக குசல் மெண்டிஸ் 78 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 52 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

ஆப்கானிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில் பரித் அஹமட் மாலிக் மற்றும் மொஹமட் நபி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனை தொடர்ந்து 324 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 42.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆப்கானிஸ்தான் அணி சார்பாக ஹஷ்மத்துல்லா ஷாஹிதி 57 ஓட்டங்களையும் இப்ராஹிம் சத்ரான் 54 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் துஷ்மந்த சமீர 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். (நி)

## யாழ்.உதைபந்தாட்ட லீக் சுற்றுக்கிண்ணம் வெற்றியை தனதாக்கியது சென்.மேரிஸ் அணி

யாழ்.உதைபந்தாட்ட லீக் சுற்றுக் கிண்ண முதல் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்.உதை பந்தாட்ட சம்மேளனத்தின் லீக் சுற்றுக்கிண்ணத்துக்கான போட்டியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் விட்டுக் கொடுக்காது இரு அணியினரும் விளையாடிய போதிலும் இறுதியில் சென்மேரிஸ் அணி ஒரு கோலினை போட்டு வெற்றியை தனதாக்கி கொண்டது. (நி-106)

## நிலானி ரத்நாயக்கவுக்கு போட்டித் தடை



ஊக்கமருந்து குற்றச்சாட்டு காரணமாக இலங்கையின் நெருந்தூர ஓட்ட வீராங்கனை நிலானி ரத்நாயக்கவுக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் ஊக்கமருந்து பயன்படுத்தியதாக எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஆசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி உட்பட பல போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை அவர் இழக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நிலானி ரத்நாயக்க, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2845

Search for people, places and things

### பபிஸ்ரன்

யார பார்த்தாலும் நல்ல மார்க் வாங்கு நல்ல மார்க் வாங்குன்னு சொல்றாங்க...



ஆனா எந்தக் கடையில அத வாங்கிற எண்டு யாராவது சொல்றாங்களா?

### மல்லிகா

பேஸ்புக்ல அறிவுரை சொன்னா லைக், கமெண்ட் பறக்குது...



பொண்டாட்டிக்கு சொன்னா தட்டு டம்ளர் எல்லாம் பறக்குதே...

### அனுஜன்

பொடுகு நீக்கும் ஷம்பு வாங்கி யூஸ் பண்ணினா அது தலைமுடியை கொஞ்சம் கொஞ்சமா நீக்கிட்டு வருது...!



தலைமுடியெல்லாம் நீக்கிட்டு கடைசியா பொடுகை நீக்கும் போல...

### டிஷான்

பணமும் ஞாயிற்றுக்கிழமையும் ஒண்ணுதான்...



வாறதும் தெரியாது... போறதும் தெரியாது.

### சத்திகா

நான் சிரிக்கும் போது என் கன்னத்தில குழியைப் பார்க்கிறபோ உங்களுக்கு என்ன தோனுது?



அவசரப்பட்டு படு குழியில விழுந்திட்டோமோன்னு தோனுது...

### பாலன்

தூங்குறதுக்கு தூக்க மாத்திரைனு இருக்கும் போது...



எழுந்திரிக்க எழுந்திரி மாத்திரை ஒன்னு இருக்கும்ல... இத சொன்ன நம்மள கிறுக்கு பையனு சொல்றாங்க....!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாண் உள்ளிட்ட

# பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை மாற்ற முடியாது

## வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம்



(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்ட போதிலும் வெதுப்பக உற்பத்திகளின் விலையில் மாற்றம் ஏற்படுத்த முடியாது என அகில இலங்கை வெதுப்பக உற்பத்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நாடளாவிய ரீதியில் உள்ள வெதுப்பகங்களில் 25 சதவீதமானோரே சமையல் எரிவாயு மூலம் வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக, வெதுப்பக உணவு உற்பத்தி பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கமுடியாது.

அதேநேரம், சமையல் எரிவாயு விலைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் விலைத்திருத்தங்களை தமது சங்கம் மேற்கொள்விலை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


**வேலணை பிரதேச சபை**
**ஸ்ரீ நயினாதீவு நாக பூசணி அம்மன் கோயில்**
**வருடாந்த உயர் திருவிழா-2023**
**பகிரங்க அறிவித்தல்**

வருடாந்த உயர் திருவிழா 19.06.2023 ஆம் திகதி ஆரம்பமாகி 04.07.2023 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக் காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் 12.06.2023 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

15.06.2023 (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு சபைக்குச் சொந்தமான யாத்திரிகர் மட வளாகத்தில் தற்காலிக வியாபாரம், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கான இடங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குளிர்பானக்கடைகள், தேநீர் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.

ஏலத்தில் முதல்நிலை பெறுபவர் அன்றைய தினமே ஏலத்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

உற்சவ காலத்தில் படகு மூலம் கொண்டுவரப்படும் விற்பனைப் பொருட்களுக்கான படகு அனுமதியினை குறிகட்டுவான் இறங்குதுறையில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளில் மற்றும் பொது வழிகளின் அருகில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரிய விடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் ஊடாக சபையினால் அனுமதி வழங்கப்பட்டவர்கள் மாத்திரமே முச்சக்கரவண்டி தரிப்பிடத்திலிருந்து சேவையில் ஈடுபட முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(சி-6676)

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை**

**தொடர்புகளுக்கு**
**021 221 0180**


# அமெரிக்காவில் பரவும் புதிய வைரஸ் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக அமையலாம்

(கொழும்பு)

கொரோனா தொற்று போன்ற அறிகுறிகளுடன் குழந்தைகள், முதியவர்கள் அதிகம் பாதிக்கப்படும் வைரஸ் தொற்று தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தொற்றுக்கு இதுவரை தடுப்பூசிகள் அல்லது வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பரவிவுள்ள இந்த அதிகம் அறியப்படாத சுவாச வைரஸின் அண்மைய அதிகரிப்பு குறித்து இலங்கை சுகாதார அதிகாரிகளும் விழிப்பு நிலையை அறிவித்துள்ளனர்.

தாம் இந்த வைரஸின் புதிய வளர்ச்சிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக இலங்கையின் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவிற்கு வெளியே இது ஆபத்தான கட்டத்தை எட்டவில்லை என்றாலும், எல்லைகளுக்கு அப்பால் அது பரவும் வாய்ப்பை கொண்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)


**Invitation for Bids (IFB-2023/01)**
**Department of Irrigation,Northern Provincial Council.**

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG,Recurrent நிதி மூலங்களின் 9 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக்கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 05.06.2023 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 17 இல் பார்வையிடவும்.

**மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

(சி-6677)


# இராசிபலன்

**06.06.2023**
**வைகாசி 23, செவ்வாய்க்கிழமை**
**துதியை காலை 5.59 மணிவரை**
**திருதியை பின்னிரவு 3.46 மணிவரை**

**பூராடம் பின்னிரவு 2.08**
**சுபநேரம் -10.22-11.52 மணிவரை**
**இராகுகாலம்-2.52-4.22 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**மிருகசீரிடம்.**

**வளவன்**

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ப்யணங்களால் பலனுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும் சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், பிறர் உதவியுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

உயர் குணத்தை என்றும் கைவிடாதே.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருமத்தை வெண்மையாக்க

# புற்றுநோய்க்கான ஊசி மருந்து

## பயன்படுத்துவதாக வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**சருமத்தை வெண்மையாக்க சிலர் குளுடாதியோன் ஊசி மருந்தை பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் வந்துள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.**

புற்றுநோயாளிகளின் சிக்கல்களைக் குறைக்க குளுடாதியோன் குறைந்த அளவுகளில் கொடுக்கப்படுகிறது.

சில தனியார் மருத்துவமனைகள் இந்த தடுப்பூசியை அழகுசாதன நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றனர். மேலும் சருமத்தை வெண்மையாக்க வரும் வாடிக்கையாளர்களிடம் சுமார் 100,000 ரூபாய் வசூலிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சருமத்தை வெண்மையாக்க வரும் வெவ்வேறு வயதுடைய ஆண் மற்றும் பெண் வாடிக்கையாளர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சருமத்தை வெண்மையாக்கவும் பளபளப்பாக்கவும் குளுடாதியோன் மாத்திரைகள் மற்றும் கிறீம்களைப் பயன்படுத்துவதற்கு சட்டப்படி அனுமதியுள்ளது, ஆனால் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி இல்லை.

"தடுப்பூசியைப் பயன்படுத்துபவர்கள் பல பக்க விளைவுகளை உருவாக்குகிறார்கள். குறிப்பாக சிறுநீரக பிரச்சினைகள், இரத்த நாளங்கள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பல்வேறு தைராய்டு கோளாறுகள் போன்றனவாகும். இந்த ஊசிகளை பயன்படுத்தும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் சலூன்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறோம்" என தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர் அமித்பெரேரா தெரிவித்தார். (நி)



தியாகி பொன். சிவகுமாரனது 49 ஆவது நினைவேந்தல்நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் நஞ்சருந்தி 1974 ஜூன் 5 ஆம் திகதி மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம்:-சிவசாந்தன்)

## சடலங்களைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத நிலையில் கடந்த 13.05.2023 அன்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் 3 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட அடையாளம் காணப்படாத சடலம் மற்றும் 01.06.2023 அன்று கொடிகாமம் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட அடையாளம் காணப்படாத சடலம் என்பன யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச் சடலங்கள் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

எனவே குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

## நாகபூசணி அம்மன் ஆலய கொடிச்சீலை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலய பிரதம குருக்களிடம் கொடிச்சீலை கையளிக்கப்பட்டுள்ளது. (நி-33)



## தியாகி பொன். சிவகுமாரின் 49 ஆவது நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் முதலாவது தியாகியான பொன். சிவகுமாரின் 49 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ்.உரும்பிராயில் அமைந்துள்ள அவரது நினைவுச் சிலையின் முன்பாக நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நினைவேந்தலில் முதலில் ஈகைச் சுடரேற்றப்பட்டு பொன். சிவகுமாரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவேந்தல் உரைகளும் இடம்பெற்றது. (நி)

## அமரர். சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவேந்தல் நிகழ்வு

(கரணவாய்)

அமரர் சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவேந்தல் இன்று காலை 8:30 மணியளவில் நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரது நினைவு சதுக் கத்தில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய செயலாளர் இ.ராகவன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சி பொது செயலரு மான எம்.கே சிவாஜிலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், உட்பட அரசியல் பிரமுகர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-60)

## காரைநகரில் கரப்பந்தாட்ட மைதானம் திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

காரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட மைதான திறப்பு மற்றும் கரப்பந்தாட்ட போட்டி இறுதி நிகழ்வு ஆகியன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றிருந்தன.

கிராமிய மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு மேம்படுத்தல் அமைச்சின் கீழ் நாடு பூராகவும் உள்ள 332பிரதேச செயலர் பிரிவுகளிலும் மைதானம் அபிவிருத்தி செய்தல் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சிபாரிசுக்கு அமைவாக கலாநிதி விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (நி-30)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்



(முல்லைத்தீவு)

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் நேற்று மிக சிறப்பாக நடைபெற்றது.

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு அதிகாலை நிறைவடைந்ததும் அங்கிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நடைபெற்றது.

அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டதுடன் தூக்குக் காவடி, பறவைக் காவடி, பாற்செம்பு, தீச்சட்டி உள்ளிட்ட நேர்த்திக் கடன்களை மக்கள் மேற்கொண்டனர்.

கடந்த ஆண்டுகளில் ஆலயத்துக்கு பக்தர்கள் வருகை தருவதில் சிக்கல் நிலைமைகள் இருந்த நிலையில் இம்முறை அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (நி-33-316)







சுற்றாடல் தினத்தை முன்னிட்டு

## மருதனார்மடம் பொதுச்சந்தையில் சிரமதானப்பணி முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மருதனார்மடம் பொதுச்சந்தை அமைந்துள்ள பிரதேசத்தினை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்திற்கு அமைவாக நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக ஊழியர்களும் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளும் இணைந்து நேற்று திங்கட் கிழமை தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர். (நி-33)

## யாழில் கைக்குண்டுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் கைக்குண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

கொழும்புத்துறை பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு போதையில் தனது வீட்டில் இருந்து பெரிய சத்தமாக தகாத வார்த்தைகளால் கத்தி பெரும் அட்டகாசம் செய்துள்ளார்.

அதனால் பொறுமையிழந்த அயலவர்கள் பொலிஸ் அவசர சேவைக்கு அறிவித்ததை அடுத்து , அவரது வீட்டுக்கு சென்ற பொலிஸார் அவரை வீட்டினுள் தேடிய வேளை அங்கே கைக்குண்டு ஒன்று இருப்பதனை அவதானித்துள்ளனர்.

அதனை அடுத்து கைக்குண்டை மீட்ட பொலிஸார் குறித்த நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# வட மாகாணத்தில் முட்டை உற்பத்தி மந்தகதியில்

## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வசீகரன் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் முட்டைகளுக்கான தேவைகள் அதிகமாக காணப்படும் போது அவற்றை உற்பத்தி செய்வதற்கான பண்ணையாளர்கள் வடமாகாணத்தில் காணப்படாமையினால் வடமாகாணத்துக்கு தேவையான முட்டைகளை வெளிமாகாணங்களில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தீவனத்திற்கான முக்கிய உள்ளீடான சோளத்தின் விலையதிகரிப்பின் காரணத்தால் கோழிகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தட்டுபாடு காணப்படுகிறது. இதன் காரணமாக கோழி வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது.

முட்டைகளை இறக்குமதி செய்வதை குறைத்து தீவனங்களை இறக்குமதி செய்வதன் மூலமாக உள்ளூர் கோழி பண்ணையாளர்களை அதிகரிக்க முடியும் என்று தெரிவித்த மாகாண பணிப்பாளர், வடமாகாணத்தில் இறைச்சி உற்பத்தி தேவைக்கு மேலதிகமாகக் காணப்படுவதுடன் இறைச்சியின் விலை அதிகமாக காணப்படுவதால் அனைத்து தரப்பினரும் அவற்றை நுகரமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே வடமாகாணத்தில் தீவனங்களுக்கு தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்து தீவன உற்பத்திகளை அதிகப்படுத்துவதன் மூலமாக மந்த நிலையில் காணப்படும் முட்டை உற்பத்தியினை அதிகரிக்கரிக்கமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்கள் முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் இணைப்பாளர், மாகாண/மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள், நிறுவன பிரதிநிதிகள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-35)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 500 |
| தக்காளி | 380 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| கோவா | 400 | 400 | 450 | 400 |
| கரட் | 350 | 350 | 420 | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 220 | 200 | 320 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 250 | 200 |
| லீக்ஸ் | 350 | 360 | 420 | 450 |
| பீற்றூட் | 450 | 400 | 300 | 550 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 500 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 70-90 | 80-100 |
| இராசவள்ளி | 300 | 400 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 600 | 700 |
| முள்ளங்கி | 120 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 197





பெரிய பிராட்டி பெருமூச்சு எறிந்தார். "ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இரத்த பாசம் உள்ளவர்கள், ஒருவரையொருவர் சந்தேகிக்கும்படி ஆகிவிட்டது. ஆதித்த கரிகாலன் ஒரு காலத்தில் என்னிடம் எவ்வளவு விசுவாசம் வைத்திருந்தான்? சொந்தத் தாயைக் காட்டிலும் நூறு மடங்கு அன்பும் மரியாதையும் கொண்டிருந்தானே? அவன் கூடவல்லவா என் பேரில் ஐயுறும்படி ஆகிவிட்டது! திருமலை! என் நாயகருடன் நானும் இந்த மண்ணுலகை விட்டுப் போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! என்னை வ்ரக் கூடாதென்று தடுத்து விட்டாரே? இங்கே செய்ய வேண்டிய பணிகளையும் கொடுத்து விட்டல்லவா போய் விட்டார்? என்ன துர்ப்பாக்கியசாலி நான்?" என்றார்.

"அம்மா! தங்கள் பதி முக்காலமும் உணர்ந்த மகான். கலியுகத்தில் ஜனக மகாராஜாவைப் போல் இந்தச் சோழ சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். தங்களை இருக்கும்படி அவர் சொல்லிப் போனது இந்த நாடு செய்த பாக்கியம். நூறு ஆண்டாகப் பல்கிப் பெருகிவரும் இந்தச் சோழப் பேரரசு சகோதரச் சண்டையினால் நசித்து நாசமாகாமல் காப்பாற்றும் பொறுப்பு தங்களைச் சார்ந்தது. தங்களாலே தான் அது முடியக் கூடியது!"

"எனக்குத் தோன்றவில்லை: என் சொந்த மகன் நான் சொல்வதைக் கேட்கவில்லை என்று ஏற்பட்ட பிறகு மற்றவர்களை நான் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? இருக்கட்டும் ஒற்றர்களைப் பற்றிச் சொன்னாயே? இங்கே யார் ஒற்றர்களை அனுப்பியிருக்க முடியும்? இளவரசன் ஆதித்த கரிகாலன் அனுப்பியிருப்பான் என்று நினைக்கிறாயா? என் பேரில் அவனுக்கு அவ்வளவு அவநம்பிக்கை வந்து விட்டதா?" என்றார் சிவ பக்த சிரோமணியான மாதரசி.

"என்னுடைய இரு காதினாலும் கேட்டேன், தாயே! இல்லாவிட்டால் இளவரசர் கரிகாலர் தங்கள் பேரில் ஐயப்படுவார் என்பதை நான் ஒரு நாளும் நம்பியிருக்க மாட்டேன்.."

"என்ன கேட்டாய், திருமலை! உன் காதினால் என்ன கேட்டாய்?"


"மாமல்லபுரத்துக் கற்கோயில் ஒன்றின் அருகில் உட்கார்ந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்."

"அவர்கள் என்றால் யார்?"

"இளவரசர் ஆதித்த கரிகாலர் ஒன்று, திருக்கோவலூர் மலையமான் இரண்டு, பல்லவப் பார்த்திபேந்திரன் மூன்று, இவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். இருளடைந்த கற்கோயிலுக்குள் நான் மறைந்திருந்து கேட்டேன். மலையமானும் பார்த்திபேந்திரனும் வெகு ஆத்திரமாகப் பேசினார்கள். இரண்டு பழுவேட்டரையர்களும் தங்கள் குமாரர் மதுராந்தகத் தேவரும் சேர்ந்து சதி செய்து சக்கரவர்த்தியைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்களாம். அதில் தங்களுக்கும் சம்பந்தம் இருக்கத்தான் வேண்டும் என்று மலையமான் கூறினான். அதை மற்றவர்கள் ஆமோதித்தார்கள். தஞ்சாவூர் மீது படையெடுத்துச் சென்று சக்கரவர்த்தியை விடுவித்துக் கொண்டு வர வேண்டும் என்று பார்த்திபேந்திரன் சொன்னான்.

அதையும் மற்ற இருவரும் ஆமோதித்தார்கள். ஆனால் சக்கரவர்த்தியைச் சண்டையின்றிக் காஞ்சிபுரத்துக்குக் கொண்டு வர இன்னும் ஒரு முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்று இளவரசர் கூறினார். அதன் பேரில் சக்கரவர்த்திக்கு ஓலை எழுதி ஒரு தூதனிடம் கொடுத்து அனுப்பத் தீர்மானித்தார்கள். அந்தத் தூதன் யார் என்பதையும் நான் கண்டு கொண்டேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## காத்துல போனதே இரகசியம்



"குயிலக்கா இங்கே பழத் தோட்டம் இருக்கின்றதா? இது வரையிலும் எனக்குத் தெரியாதே!" என்று வியப்போடு கூறியது. "அணில் தம்பி! எனக்கும் கிளியக்கா சொல்லித்தான் தெரியும்" என்றது.

உடனே அணில் "குயிலக்கா நீங்கள் முதலில் செல்லுங்கள். பின்பு நான் எனது நண்பர்களை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறியது.

குயில் வேகமாக பழத்தோட்டத்தைத் தேடிப் பறந்து செல்லத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அணில் மற்ற அணில்களையும் அழைத்துக் கொண்டு பழத் தோட்டத்தை நோக்கிச் சென்றது. அணில்கள் எல்லாம் கூட்டமாக சேர்ந்து கொண்டு பழத் தோட்டத்தில் புகுந்து, பழங்களை எல்லாம் கடித்துக் குதறி சின்னா பின்னமாக்கின. அந்த நேரம் அங்கு வந்த பழத் தோட்டக்காரர் அணில்களின் செய்கையினைப் பார்த்து ஆத்திரம் கொண்டார்.

இந்த அணில்களின் தொல்லை தாங்க முடியவில்லை. இனிமேலும் நாம் சும்மாயிருந்தால் தோட்டத்தில் இருக்கின்ற பழங்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமலாகிவிடும் என்று நினைத்தார். அவர் அடுத்த நாளே பழங்களைச் சுற்றிலும் பாதுகாப்பாகக் கம்பி வலையினை அமைத்து மூடி மறைத்துவிட்டார்.

மறுநாள் வழக்கமாக பழங்களைப் பறிக்க வேண்டி பழத்தோட்டத்தில் புகுந்த தேஜா கிளி அதிர்ச்சியடைந்தது.

பழங்கள் எல்லாம் வலையினால் மூடியிருப்பதைக்கண்டு, கவலையுடன் பழங்களைப் பறிக்க முடியாமல் தன் இருப்பிடத்தை நோக்கித் திரும்பிப் பறந்து வந்தது.

வரும் வழியில் குயில் கிளியை சந்தித்தது. கிளியக்கா! நீங்கள் பழத் தோட்டத்திற்கு சென்று பழங்களைப் பறிக்க முடியாமல் தானே வருகின்றீர்கள்! என்ன செய்வது, நான் அணிலிடம் பழத் தோட்டத்திற்கு செல்வதாக உளறி விட்டேன்.

அணில்கள் கூட்டமாகச் சென்று பழத்தோட்டத்தில் உள்ள பழங்களை நாசம் செய்யவே தோட்டக்காரர் வேலியமைத்துவிட்டார் என்று வருத்தத்துடன் கூறியது.

கிளி பழத்தோட்டத்திற்குச் சென்று பழங்களை பறித்து செல்ல முடியாத காரணத்தால் வேறு எங்காவது பழங்கள் கிடைக்கிறதா என்று இரை தேட வேண்டி பறந்து செல்லத் தொடங்கியது.

"பழத் தோட்டம் இருக்கின்ற இடத்தை இது வரையிலும் ரகசியமாக பாதுகாத்து வந்தேன்.

இந்தக் குயிலிடம் சொல்லப்போய் இப்போது நண்பனுக்கும், எனக்கும் பழங்கள் கிடைக்காமல் ஆகிவிட்டதே! இனி வேறு இடம்சென்று நண்பனுக்கு இரை தேடிக் கொடுக்க வேண்டியது தான்" என்று கவலையுடன் பறந்தது தேஜா கிளி.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுகிய வழியில் அடைந்துவிட முடியாது. ~கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விலைக்குறைப்பை உடன் அமுலாக்குங்கள்

பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை கடந்த ஒரு சில நாட்களுக்கு முன் குறைப்புச் செய்யப்பட்டது.

விலை குறைப்புச் செய்யப்படவுள்ளதென்ற தகவலை அறிந்த எரிபொருள் நிலையங்கள் தங்கள் நிலையங்களில் பேணவேண்டிய தாங்கிருப்பை அடியோடு கைவிட்டனர்.

இதனால் விலைக்குறைப்பு செய்தபோது, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட மக்கள், மிகுந்த அசௌகரியங்களைச் சந்தித்ததுடன் எரிபொருள் நிலையங்களில் நீண்டவரிசையில் காத்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உருவாகியது.

இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு, எரிபொருள் நிலையங்கள் மீது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறுக்கமான கட்டுப்பாடுகளை பின்பற்றாமையே காரணம் என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, எரிபொருள் தவிர்ந்த ஏனைய பொருட்களின் விலைகள் குறைப்புச் செய்யப்படுகின்றபோது அதன் அனுகூலத்தை நுகர்வோர் அனுபவிக்க முடியாத வகையில் விற்பனையாளர்கள் விலைக் குறைப்புச் செய்யாமல் இருப்பதாகப் பலரும் குறைபட்டுக் கொள்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, வடபகுதியில் விலைக் குறைப்பு என்பது உடனடியாக அமுலாகுவதில்லை எனக் குற்றம் சாட்டப்படுவதுடன் ஏற்பட்ட விலைக் குறைப்பை முழுமையாக அமுல்படுத்தாத நிலைமையும் காணப்படுவதாக நுகர்வோர் விசனப்படுகின்றனர்.

இவ்வாறு வடபகுதியில் விலைக் குறைப்பை அமுல்படுத்தாத காரணத்தால், கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியில் விலைக் குறைப்பின் அனுகூலத்தை அங்கிருக்கக்கூடிய நுகர்வோர் அனுபவிக்க, வடபகுதியில் இருக்கக் கூடிய நுகர்வோர் அதிகூடிய விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இஃது ஒரு நாட்டுக்குள் வாழுகின்ற மக்கள் சமூகத்தில் நுகர்வுச் செலவில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தி நிற்கிறது.

அதிலும் குறிப்பாக மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலைகள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் அதீத வேறுபாட்டைக் கொண்டிருப்பதாகக் குறித்துரைக்கப்படுகிறது.

எனினும் இது தொடர்பில் வடபகுதியில் இயங்கக்கூடிய விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவுகள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தால், வடபகுதி மக்கள் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பில் இருந்து மீள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

தவிர, அவர்களின் உழைப்பு உறிஞ்சப்படுகின்ற பரிதாப நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே விலைக்குறைப்புகள் ஏற்படும் போது, அதனை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்பதுடன் அதன் மீது சம்பந்தப்பட்ட அமைப்புகள் அதீத கண்காணிப்பைச் செய்ய வேண்டும் என்பதும் நுகர்வோரின் கோரிக்கையாக அமைகிறது.

### எந்த ஒரு தேர்தலையும் நடத்தாது

# ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் வேலையை அரசு செய்கின்றது

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையில் எந்த ஒரு தேர்தலையும் நடத்தாது ஒரு மிகப்பெரிய மாயையை சிங்கள மக்களிடையே கட்டவிழ்த்து விட்டு ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கின்ற வேலையை இன்று இருக்கின்ற ஆட்சி செய்ய முனைகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையினால் பல்லவராஜன் கட்டு சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட பல்லவராஜ மன்னன் சிலை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (05-06-2023) காலை பூநகரி பிரதேச சபையின் செயலாளர் இரட்ணம் தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த சிலையை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒரு சுய ஆட்சியாக சுயநிர்ணய உரிமையுடன் ஒரு தன்னாட்சியோடு நாம் இந்த மண்ணில் வாழ்ந்தோம் அந்த தன்னாட்சி உரிமையை தந்த தமிழ் மன்னர்களில் பல்லவராய மன்னனும் பார்க்கப்படுகின்றார்.

அதனால் தான் இந்த சிலையை நிறுவுதல் என்பதும் திறப்பு விழா என்பதும் எங்கள் எல்லோருக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு வாய்ந்த ஒரு முக்கியமானதாக இன்று பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே அக்கராயன் மண்ணிலே அந்த அக்கிராயன் பிரதேசத்தை ஆண்ட சிற்றரசன் அக்கிராச மன்னனுடைய சிலையை நிறுவி இருக்கின்றோம் அதேபோல ஆனையிறவிலே நடராஜர் சிலையை நிறுவி இருக்கின்றோம்.

நாங்கள் இந்த மண்ணிலே ஆண்ட பரம்பரை எங்கள் மண்ணிலே நாங்கள் ஆண்டதற்கான வரலாறுகளை சரியான முறையில் இன்னொரு சந்ததிக்கு சொல்லாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

எங்களது கால கடமை எங்கள் அடுத்த சந்ததிக்கு நாங்கள் எங்கள் வரலாறுகளை சொல்ல வேண்டிய கடமை என்று கூட இந்த தேச விடுதலை போராட்டத்திலே முதன் முதல் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கான ஈழ தேசிய விடுதலை போராட்டத்தில் எண்பதுகளில் துப்பாக்கி தூக்கி போராட வேண்டிய நிர்ப்பந்தத்தை இந்த அரசு ஏற்படுத்திய போது முதலில் உயிரிழந்த மாவீரன் சிவகுமாரனுடைய நினைவு நாளும் இன்றாகும்.(நேற்று)

இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு 40 வருடங்களாகின்றன ஆனால் அதில் எழுதப்பட்டிருக்கின்ற சிறிய சிறிய சரத்துக்களை கூட நடைமுறைப்படுத்த முடியாத இலங்கை அரசாங்கம் இன்றும் தன்னுடைய கதைகளை பொய்களாகவே சொல்லிக்கொண்டிருக்கின்றது

ஜனாதிபதி குறிப்பிடுகின்றார் தேர்தல் நடந்தால் யாரும் பெரும்பான்மை வெற்றியை எட்டமாட்டார்கள் என்று ஆனால் கடந்த தேர்தலில் அவருடைய கட்சியானது எது வித வாக்குகளையும் பெற்றுக் கொள்ளாது அவர் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்தார்.

தன்னுடைய சூழ்ச்சியின் மூலம் அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகினார் அவர் தன்னை போல ஏனைய கட்சிகளையும் இந்த நாட்டிலே ஒரு சிதைந்த நிலையில் யாரும் ஐம்பது வீத வாக்குகளை எடுக்க மாட்டார்கள் என்ற ஒரு மிகப்பெரிய மாயை இந்த சிங்கள மக்களிடையே கட்டவிழ்த்து விட்டு இனவாதத்தை விதைத்து ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கின்ற வேலையை தேர்தல் நடத்தாது அரசாட்சியை கொண்டு செல்வதற்கு இன்று இருக்கின்ற ஆட்சி இயந்திரம் ஒரு புதிய வழிவகையை தேடுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-315)

# கோழி இறைச்சி, மீன், காய்கறிகள் விலை அதிகரிப்பு தற்காலிகமானது

### வர்த்தக அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கோழி இறைச்சி, மீன் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு தற்காலிகமான ஒன்று என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக கோழி இறைச்சி, மீன், காய்கறிகள் உள்ளிட்டவற்றின் விலை பாரியளவில் அதிகரித்து, தொடர்ந்தும் சந்தையில் குறித்த விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமை, அடுத்துவரும் வாரங்களுக்கு தொடரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்ய முடியாததுடன், அது குறித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அதிகரித்துள்ள கோழி இறைச்சியின் விலை அடுத்த சில வாரங்களில் குறையலாம் என அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்படவில்லை என அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

(ம)

## விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மீது பட்டா ரக வாகனம் மோதியதில் படுகாயம் அடைந்த முச்சக்கர வண்டி சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராசவீதி, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி இரவிச்சந்திரன் (வயது-47) என்பவராவார்.

மேற்படி நபர் கோப்பாயிலிருந்து கடந்த மாதம் 22 ஆம் திகதி வாடகைக்கு முச்சக்கரவண்டியை கிளிநொச்சிக்கு கொண்டு சென்றுள்ளார்.

29 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் முச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு அதற்குள் இருந்த சமயம் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்து கொண்டிருந்த பட்டா ரக வாகனம், முச்சக்கர வண்டி மீது மோதி பின்னர் அருகில் மோட்டார் சைக்கிளில் நின்ற பெண் ஒருவர் மீதும் மோதியது.

இதில் இருவரும் படுகாயம் அடைந்தனர்.

இதில் முச்சக்கர வண்டி சாரதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சனிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

(ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

24

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



“இலங்கை கடல்பகுதிக்கு போகாமல் இருக்கவேண்டும் என்றால், சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் அங்கே போகாமல், மற்ற பகுதிகளுக்கு தங்களால் செல்ல முடியும் என்கின்றனர்.

தமது கடற்பகுதிகளில் மீன் குஞ்சுகள் அதிகளவில் வளர்க்கப்பட வேண்டும். கடலில் மீன்களுக்கு உணவான கடல் புல், தாவரங்களை அதிகளவில் வளர்த்தால், மீன்வளம் பெருகும்” என்பதும் மீனவர்களின் கருத்தாகவே உள்ளது. மத்திய அரசும், தமிழக அரசும் இந்த பிரச்சினை தொடரும் என்ற நிலையில் இருக்காமல், முற்றும் என்ற நிலையை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்கின்றனர்.

**வடபகுதி கடற்தொழிலின் சம கால நிலவரங்கள் பற்றி யாழ்ப்பான பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை பேராசிரியர் கலாநிதி ஆசைஆனந்தன் அவர்களின் கருத்து.**

“இன்றைய அரசியல் சமூக பொருளாதார நிலை என்ன? மாற்றம் வேண்டுமாயின் போக்கென்ன வீச்சென்ன?” என்கிற தலைப்பில் 2018 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஒரு கருத்தரங்கு நடந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் சாந்தன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பங்கேற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியற் துறை பேராசிரியர் கலாநிதி ஆசை ஆனந்தன் “வடபகுதி கடற்றொழி லின் சமகால நிலவரங்கள்” தொடர்பில் ஆற்றிய உரையின் தொகுப்பு விக்னேஸ்வரி அவர்களால் 2018 ஆம் ஆண்டு நிமிர்வு ஆவணி இதழில் எழுதப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

எங்களை சுற்றிவர அகலமான கண்டத்திட்டு கண்டமேடை இருக்கின்றது. உலகப்பிரசித்தி பெற்ற மீன்பிடி மேடை எங்களுடைய கையில் தான் இருக்கின்றது. பருத்தித்துறையில் இருந்து கிழக்காலே 200 கிலோமீற்றர் முல்லைத்தீவு வரை நாங்கள் ஆழ்கடல் போகலாம்.

எங்களிடம் நிறைய கடல்வளம் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கடலில் கால் வைப்பது என்றால் மத்திய அரசிடம் அனுமதி பெற்றுத் தான் நாங்கள் கால் வைக்க வேண்டும்.

எங்களுடைய கையில் எதுவும் இல்லை. கடல் வளம் சம்பந்தமான கடற்றொழில் அமைச்சு என்பது மத்திய அரசின் கீழ் தான் இருக்கின்றது. வடமாகாணத்தில் நன்னீர் மீன்பிடி அமைச்சு மட்டும்தான் இருக்கின்றது. கடல் சம்பந்தமான அனுமதி எவருமே செய்யமுடியாத அளவிற்கு முழு கட்டுப்பாடும் மத்திய அரசின் கையில்தான் இருக்கின்றது. முழு வள்மும் அவர்களுடைய கையில் இருப்பதால் இந்த வளப் பயன்பாடு எங்களுடைய கரையில் இருக்கின்ற மக்களை விட தென் பகுதி மக்களுக்கும் அந்நிய இந்திய மீனவர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிலைதான் காணப்படுகின்றது.

எங்களுடைய வளத்தின் பயன்பாட்டை பார்த்தோமென்றால் நிறைய பிரச்சனை இருக்கின்றது. அதாவது இதனை மூன்று கட்டங்களாக பார்க்கலாம். போருக்கு முற்பட்டகாலம், போர்க்காலம், போருக்கு பின்னான காலம் என பார்கலாம். போருக்கு முன்னர் அதாவது 1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் பார்த்தால் இலங்கையின் உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் மட்டும் பார்த்தால் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் உற்பத்தி நடந்திருக்கின்றது. இதே போல மன்னார், முல்லைத் தீவு கடற்கரை அண்டியவை. கிழக்கிலே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வரும். வடக்கைத் தான் நான் இதில் முன்னிலைப் படுத்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் இருக்கின்றார்கள். முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் சேர்ந்து ஒரு இலட்சம் பேர் இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட எல்லாமாக இரண்டு இலட்சம் பேர் மீன்பிடியோடு சம்பந்தப்பட்டவர்கள். வளமும், ஆளணி வளமும் எங்களுடைய கையில் இருக்கின்றது. ஆனால் பயன்பாட்டில் தான் பிரச்சனை இருக்கின்றது. யுத்தத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு எல்லாம் சேர்ந்து நிறைய உற்பத்தியை வடக்கு பகுதிதான் கொடுத்தது. இலங்கையின் மொத்த கடல்வள உற்பத்தியில் தெற்கைவிட மூன்றில் இரண்டு பகுதியை வடக்கு பகுதிதான் கொடுத்தது. இங்கிருந்து ஏற்றுமதி இடம் பெற்றது. கடலட்டை, சங்கு, இறால், சிங்கஇறால் என இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. நிறைய அந்நியச் செலாவணியை பெற்றுக்கொடுத்தது வடக்கு.

அப்பொழுது இந்திய மீனவர்களுடைய வருகையோ தென்பகுதி மீனவர்களுடைய ஊடுருவலோ இல்லை. ஆனால் போர் தொடங்கிய பின்னர் மிக மோசமாக பாதிக்கப்பட்டது கடல்வளத்துறை தான். இனப்பிரச்சினை தீவிரமடைந்த போது இலங்கையின் கரையோரங்களின் முழுப்பகுதியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் போனது. மீனவர்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தமை, நிறையப்பேர் கடலில் இறந்தார்கள். அப்படி நிறைய பிரச்சினைகள் இருந்தன.

கரையோரப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் நிறைய சட்டங்கள் அதாவது பொருளாதார தடை, கடல் வலயத்தடை, இரவில் கடலுக்கு போக முடியாது, இயந்தரப்படகு பாவிக்க முடியாது, குறிப்பிட்ட தூரம் வரைக்கும்தான் போகலாம், பகலில்தான் கடல் தொழிலுக்கு போகலாம் என நிறைய சட்டங்கள் போட்டுத்தான் மீன் பிடிக்க விட்டார்கள். இவை தான் வடபகுதி மீன்வள வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. 25வீதமாக இருந்த உற்பத்தி 2 தொடக்கம் 3 சதவீதம் வரைக்கும் செங்குத்தாக கீழிறங்கியது.

சமாதான காலங்களில் கொஞ்சம் கடற்றொழிலுக்கு அனுமதித்தார்கள். பின்னர் இந்தியப் படைகள் இருந்த போது ஓரளவு நன்றாக இருந்தது. யுத்தம் முடிந்து 2009 இற்கு பின்னர் போன தாயக கடல்வளம் மீள கட்டியெழுப்பப்படும், இராணுவத்தினர் கடற் கரையோரங்களை விட்டு முழுமையாக போவார்கள் என்று தான் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் எதிர்பார்த்ததிற்கு மாறாக எங்களுக்கு அவ்வளவு வெற்றி கிடைக்கவில்லை.

இன்று யாழ்ப்பாணத்தில் பார்த்தால் 15000 - 20000 மெற்றிக் தொன் உற்பத்திதான் இடம் பெறுகின்றது. அன்று இருந்த 50000 மெற்றிக் தொன் அளவை எட்ட முடியாமல் உள்ளது. அதே போல் முல்லைத்தீவு, மன்னாரிலையும் மிக மோசமான நிலையில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்து உள்ளது. அந்நியர்களின் வடபகுதியை நோக்கிய ஊடுருவல் இடம்பெறுகின்றது. அதாவது தென்பகுதி மீனவர்கள், இந்திய மீனவர்களுடைய அத்துமீறிய ஊடுருவல் வடபகுதி மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய பெரும் தடையாக உள்ளது. கரையோரம் முழுக்க இராணுவ முகாம்கள் உள்ளபடியால் தென்பகுதி மீனவர்கள் இங்கு வந்து இராணுவ முகாம்களுக்கு அருகில் வாடிகளை போட்டுக் கொண்டிருந்து தொழில் செய்து எங்களுடைய வளங்களை சுரண்டுகின்றார்கள். அரசாங்கம் அவர்களுக்கு அனுமதியும் வழங்கி அவர்களுக்கு பாதுகாப்பும் வழங்குகின்றது. கொக்கிளாய், நாயாறு எல்லைப் பிரதேசம் அப்படியே அவர்கள் வசம் போய்விட்டது.

மன்னாரில் முள்ளிக்குளம் என்ற கிராமம் 300இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழுகின்ற தமிழ் கிராமம். அது எல்லைக் கிராமம். எல்லையை அகற்றிவிட வேண்டும் என்பதற்காக பாரம் பரியமாக அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றினார்கள். யுத்தம் முடியவிடுவோம் என்று அவர்களாகவே கூறினார்கள். ஆனால் இன்று வரை அம் மக்களை அங்கு விடவேயில்லை. வடமேற்கு கட்டளைச் செயலகம் அக்கிராமத்தில் தான் இருக்கின்றது. அங்கிருக்கும் வீடு, கோயில், விவசாய நிலங்களை அவர்கள்தான் பயன்படுத்துகின்றார்கள். அங்கிருந்த மக்களெல்லாம் மன்னார், மடு என்று இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். கொஞ்சப்பேர் 10 கிலோமீற்றர் தள்ளிக் காட்டுக்குள்ளே இருக்கின்றார்கள். தங்கள் சொந்த ஊருக்கு என்றோ ஒருநாள் திரும்புவோம் என்ற ஏக்கத்துடன் இருக்கின்றார்கள். ஆனால் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

தென்பகுதி மீனவர்கள் குறிப்பிட்ட காலத்தில் வந்து வாடி அடித்து இருந்து கடற்தொழில் செய்து விட்டு குறிப்பிட்ட காலம் முடிய திரும்ப போய்விடுவார்கள். வாடைக்காற்று நேரம் வந்து வாடியடித்து இருந்து விட்டு சோழக காற்று நேரம் அவர்கள் போய் விடுவார்கள். ஆனால் வாடியெல்லாம் அப்படியே இருக்கும். அதற்கு கடற்படையினர் காவல் காக்கின்றார்கள். தலைமன்னார் பியர், சவுத்பார், சிலாபத்துறை அப்படியே அவர்கள் கையில் போய்விட்டது.

அதுமட்டுமல்லாமல் ஆழ்கடலில் பலநாள் கலங்களை பயன்படுத்துகிறார்கள். ஆழ் கடலில் சென்று மீன் பிடிக்கும் அந்தக் கலம் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா பெறுமதி வரும். அது கடலில் 15 நாள்வரை நின்று மீன் பிடிக்கக் கூடிய வசதி உடையது. தென்னாசியாவில் இலங்கையின் தென்பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடியில் முதலிடத்தில் உள்ளார்கள்.

எங்களுடைய கிழக்குப் பக்கத்தால் வந்து அவர்கள் இந்த கலத்தை பயன்படுத்தி எங்களுடைய பெறுமதி மிக்க கடல் வளங்களை சுரண்டி செல்கின்றார்கள். எங்களுடைய கையில் அவ்வாறான ஒரு படகுகூட கிடையாது. இன்று பருத்தித்துறையில் கொஞ்ச பல நாள் கலங்கள் உள்ளன. ஆனால் அவை அந்தளவிற்கு பெரியதல்ல. அதில் நாலைந்து நாள் நின்று மீன் பிடிக்கக்கூடிய வசதி தான் இருக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துகளின்...

படவுள்ளது.

அத்துடன், இந்த விலை குறைப்பானது எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நுணாவிலில்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 81 வயதான அருட்பிரகாசம் என்ற முதியவரே அவரது வீட்டின் வெளி அறையில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதியவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## யாழ்.பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கும் இந்தியாவின் சென்னை, வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் (Vellore Institute of Technology) இடையிலான கல்வி சார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளான ஸ்ரீ மனோஜ் குமார், ஸ்ரீ நாகராஜன் ராமஸ்சுவாமி மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், பொறியியல் பீடாதிபதி ஏந்திரி கே.பிரபாகரன், முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா, குடிசார் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி பி.கேதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சார்பில், கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பாடசாலையின் (School of computer science and Engineering - SCOPE) பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ் பாபு, பேராசிரியர் பி. சுவர்ணலதா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே.என்.வி.ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சென்னை, வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் அதன் சர்வதேச உறவுகளுக்கான அலகின் ஊடாக சர்வதேச ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இத்தகைய கூட்டு ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையில் ருகுண பல்கலைக்கழகம் வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கைக்கமைய இரண்டு தரப்புகளில் இருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்படவுள்ளன. (ம-33)

## பொலிஸ்...

குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடரில் இன்று கலந்துகொள்ளவுள்ளதால் இது குறித்து சபாநாயகருக்கு அறிவிக்கவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சபாநாயகரை தொடர்பு கொள்ள முயன்றபோதும், தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனையடுத்து பிரதிசபாநாயகருக்கு இது குறித்து அறிவித்துள்ளதாக கஜேந்திர குமார் தெரிவித்துள்ளார். (ம)

## நாட்டில்...

இந்த நாட்டில் பத்திரிகை சுதந்திரம் என்ற நிலை முற்றாக மாறும் என நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்களுக்குள் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் புதிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## உத்தேச...

தாச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களே ஜனநாயகத்தின் நான்காவது தூண்கள் என முழு உலகமும் ஏற்றுக்கொள்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நீதித்துறையிலும் இந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட நாங்கள் தீர்மானித்துள்ளோம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

1997ம் ஆண்டின் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் அரசமைப்பிற்கு எதிரானது என உயர்நீதிமன்ற நீதிபதி ஏஆர்பி அமரசிங்க தெரிவித்திருந்ததை எதிர்க்கட்சி தலைவர் நினைவுகூர்ந்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் எங்களிற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம)

## முன்னணியின்...

ஸாரால் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர், கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட 10க்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குறித்த நபருக்கு பிணை வழங்க வேண்டாம் என்று வைத்த விவாதத்தின் அடிப்படையில் எதிர்வரும் 7ஆம்திகதி வரை அவரை தடுப்பு காவலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-100,104)

## வட...

கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வாரம் குறித்த சந்திப்பு நடைபெற்றதாக இந்திய துணைத் தூதரகம் டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது, வடக்கில் இந்திய அபிவிருத்தித் திட்டங்களின் நிலை மற்றும் பல்வேறு துறைகளில் இந்தியாவிற்கும் இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் வடமாகாண ஆளுநருக்கு இந்திய துணைத் தூதர் இந்திய நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பு செய்தார். (ம-33)

## ஏ9 வீதியில்...

தொடர்பில் மேலும் தெரியவருகையில், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற வான் மன்னகுளம் பகுதியில் முன்னால் பயணித்த டிப்பர் வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் கனகராயன் குளத்திற்கும் மாங்குளத்திற்கும் இடையில் 212வது கிலோமீற்றர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தை அடுத்து டிப்பர் வாகனம் அங்கிருந்து சென்ற நிலையில் பொது மக்கள் உதவியுடன் வானில் இருந்த 7 பேர்படுகாயங்களுடன் மீட்கப்பட்டு 1990 அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1591
வெற்றி இலக்கங்கள்
இடபம் 6 9 6 8 0 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2023.06.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1166
L 23 39 69 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.05
சீட்டிழுப்பு இலக்கம் 3378
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 01 14 45 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1484
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
N 22 12 47 56 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.05
சீட்டிழுப்பு இலக்கம் 445
வெற்றி இலக்கங்கள்
தனுசு 23 44 49 56 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/05
சீட்டிழுப்பு இலக்கம் 5136
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 8 8 6 3 8 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2110 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.06.05 தினம் திங்கட்கிழமை
D 23 26 34 67
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரு. 3,816,240/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.05
வெற்றி வாரம்: 4271
வர்ணம்: இளம் நீலம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 48,928,113.00
வெற்றி இலக்கங்கள்
03 25 34 55 X
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரு. 6,153,122.20
திகதி 2023-06-05
வெற்றி வாரம் 3822
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் மேஷம்
17 20 39 52
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரு. 9,796,440/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 31 19 36 39 62
சுப்பர் இலக்கம்
1286
2023.06.05
திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 335,348,525.80
DLB

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.05
வெற்றி வாரம்: 1927
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 43,611,676.40
வெற்றி இலக்கங்கள்
08 24 33 34 Z
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1936
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.06.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரு. 51,165,733.40/-
35 49 57 77 A
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15856)

**076 825 7716** (ஆகாஸ்)



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இரத்தினக்கல் வியாபாரம் சொந்தமாக செய்யும் 1983 இல் பிறந்த உத்தராடம் 2 ஆம் பாதம், கிரக பாவம் 39, 8 இல் சூரியன், செவ்வாய் உடைய மணமகனுக்கு படித்த தகுந்த மணமகள் தேவை. (15848)

**077 636 6012**



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
- துப்பரவு பணியாளர் ஆண்/ பெண்
- சிட்டை எழுதுநர் (கணனி) ஆண்/பெண்
- தேநீர் தயாரிப்பவர்

(15845)

**076 166 1986**


# பெண்களின் முகத்தில் மிளகாய்த்தூள் வீசி

## தங்க நகைகளை கொள்ளையடிக்கும் கும்பலைச் சேர்ந்த ஐவர் கைது

(களுத்துறை)

பெண்களின் முகத்தில் மிளகாய்த் தூளை வீசி தங்க நகைகளைக் கொள்ளையடிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்றின் உறுப்பினர்களில் ஐவர் வாகனங்கள் மற்றும் பல பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை, பன்விலாஹேனவத்த பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு முச்சக்கரவண்டிகள் மற்றும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் சந்தேக நபர்கள் ஐவரும் வீதியில் செல்லும் பெண்களின் முகத்தில் மிளகாய்த்தூளை வீசி அவர்களைத் தாக்கி தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட தங்க நகைகள், ஜெனரேட்டர், கார் கழுவும் இயந்திரம், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், இரண்டு முச்சக்கரவண்டிகள் மற்றும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம)


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து ஏறக்குறைய 1/2 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் கோழிக்கூடு (நிலக்கூடு) ஒன்றும் விற்பனைக்கு உள்ளது. (15849)

**077 699 8683**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777** (C-6679)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com
(C-6679)



## குருக்கள் தேவை

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா ஆலயத்திற்கு மகோற்சவம் நடாத்தக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட குருக்கள் ஒருவர் அவசரமாகத் தேவை.

**இருப்பிட வசதிகள் உள்ளன. மற்றும் விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. :**

**077 354 8525**

நிர்வாக சபையினர்

(C-6678)


'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக'

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
12 . 06 . 1950



ஆண்டவன் அடியில்
05 . 06 . 2023

### திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம் (யோகம்)

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் காமாட்சியம்மன் கோவிலடி, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் 05.06.2023 அன்று காலமானார்.

அன்னார் அமரர் செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் தர்மலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் பரராஜசிங்கத்தின் (சமாதான நீதவான், ஸ்ரீ அம்பாள் ரேட்ஸ், அம்பாள் ஹாட்வெயர்ஸ், நீர்வேலி முன்னாள் உரிமையாளர்) பிரிய பத்தினியும் தர்மகுமாரன் (போதனாசிரியர் - தொழில்நுட்பக் கல்லூரி, மன்னார்), தர்மசங்கரன் (யாழ்ப்பாணம் மாநகர சபை), தர்மரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபிரியா (நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (IT Park), சாருஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நேருக்சன், சிஜிசன், வைஷ்சகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வரட்ணம், அமரர் கமலேஸ்வரி மற்றும் முத்துலிங்கம், மகேஸ்வரி (கனடா), அமரர் கமலாதேவி, அமரர் பத்மநாதன், உருக்குமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு.
021 205 4822, 077 706 0502

(15853)

தகவல்:-
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15857)

**076 733 6047**
**076 755 8606**



## பதவி வெற்றிடம்

◆ **முகாமைத்துவ உதவியாளர்கள்**
25 வயதிற்கு மேல்
(பெண்கள் தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)

◆ **அலுவலகச் செய்தியாளர்கள்**
25 வயதிற்கு மேல்
(ஆண்கள் பகல், இரவுக் கடமை)

◆ **ஒப்புநோக்குநர்கள்**
35 வயதிற்கு மேல்
(ஆண்கள் இரவுக் கடமை)

யாழ்ப்பாணத்தை அண்மித்த இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு - **076 097 3121**

பொது முகாமையாளர்
வலம்புரி


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org